# தினசரி வழிபாட்டு முறை



# 3. ஸரஸ்வதி துதி

1. நான்முகன் நாவினில் நடமாடும் தேவியே ஸரஸ்வதியே வாணி நாங்கள்
   நயந்துனைப் போற்றியே நமஸ்கரித்தோம் அன்னை வேதபுஸ்தகபாணி

2. கலைகள் எல்லாம் ஒன்றாய் நிலைத்திருக்கும் எங்கள் கலையரசி ராணி யாமும்
   தலைவணங்கியே தாள் பணிந்தோம் எங்கள் தாயே வீணாபாணி

3. காயத்திரி ஸாவித்ரி ஸந்த்யா ஸரஸ்வதி ஶரணடைந்தோம் தாயே எங்கள்
   வாக்கில் வந்தே அருள் தாக்கி உள் நாக்கினில் உறைந்திடுவாய் நீயே

4. வித்தைக்கெல்லாம் ஆதி வித்தையாகி நின்ற வேதகலை ஸரஸ்வதி இன்று
   வித்வான்கள் என விளங்குவோர் நாவினில் துலங்கும் கலாநிதி

5. வேதாகமங்களுக்காதாரமாம் உயர் ஶாரதா மணிதேவி - எங்கள்
   நாரதாதி ஞான ஸனக ஸநந்தாதி முனிவோர்களின் ஜனனீ

6. வெண்தாமரையின் மேல் வீற்றிருக்கும் மஹா மேதை கலைவாணி தூய
   வெண்ணிற ஆடை அணிந்திருக்கும் வீணா ஞான கலாலோலினி

7. அன்பே உருவாகி - அன்னத்தின் மீதேறி ஆளவந்தாய்தேவி கவி
   வன்மையாய்ப் பாடி உன் ஆசிகள் வேண்டி அழைத்தோம் உன்னைக் கூவி

8. மலைமகள் அலைமகள் கலைமகள் ஆகி நீ மாறி நின்றதேவி - அன்று
   வரதனின் உந்தியில் பிறந்திட்ட பிரம்மனின் ஆசைக்குகந்த தேவி